நாள் 22.06.2023.
அ வ எண் 33/20
வா சா 1 தாமஸ்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

நான் தாவா சொத்தை செல்லதாய் அம்மாள் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலமாக உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்ணில் மொத்தம் 92 சென்ட் என்று சொன்னால் சரிதான். மேற்படி 92 செண்டில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாததியம் என்று தெரியுமா என்றால் தெரியும். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான மாடக்கண் நாடாருக்கும் மேற்படி 92 செண்டில் சொத்து உள்ளதா என்றால், இருந்தது மாடக்கண் நாடாரின் தகப்பனார் காலத்தில் அதனை விற்றுவிட்டார்கள். தறபோது அவர்களுக்கு சொத்து இல்லை. மாடக்கண் நாடார் தவிர வேறு யார் யாருக்கெல்லாம் 92 சென்டில் பங்கு உண்டு என்றால், தேன்மொழி , செல்லம்மாள், மோசஸ் பொன், முத்து, சுடலைமுத்து, வேலு, இசக்கிமுத்து, ஜெபராஜ், அன்பையா, மற்றும் எனக்கும் பங்கு உண்டு. எனக்கும் மேற்படி நபர்களுக்கும், மற்றும் வா.சா.ஆ.1யை எழுதி தந்த செல்லத்தாய் அம்மாளுக்கும் மேற்படி நபர்களுக்கும் இடையில் பாகப்பிரிவினை நடைபெற்றதா என்றால், பிரித்துதான் அவரவர் அனுபவதத்தில் சொத்து வந்தது. ஆனால் பாகம் பிரித்த்தை காட்ட் எழுத்து மூலமான ஆவணம் உண்டா என்றால், இல்லை. ஆனால் நான் வாங்கிய வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் நான்குமால் வடக்கு மாடக்கண் நாடார் சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வடக்கில் இருந்த புறம்போக்கை மாடக்கன் நாடார் அனுபவித்து வந்தார் தாவா சொத்தை எனக்கு வாங்கிய தந்தது மாடக்கன் நாடார் மகனான ராஜன்துரைதான் அவர்தான் சாட்சி கையெழுத்தும் என்னுடைய பத்திரத்தில் போட்டிருக்கிறார். ராஜன்துரைதான் வடக்கே இருந்த புறம்போக்கை காண்பித்தால் மாட்டிக்கொள்வோம் என்றும் எங்களது இடம் என்று காண்பித்துவிடுவோம் என்று சொன்னதன்பேரில்தான் மாடக்கண் நாடார் இடம் என்று வடக்குமால் காண்பிக்கப்பட்டுள்ளது. நான் தற்போது சொன்ன இந்த விவரத்தை எனது வழக்கு பிராதில ' நர்ன கூறியுள்ளேனா என்றால், மறதியாக உள்ளது. மேற்படி 92 சென்டிற்கு கிழமேல் தென்வடல் அளவுகள் என்ன என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. சொத்தை நான் கிரையம்

˙வாங்கும்போது அளந்து பார்த்தேனா என்றால், பார்க்கவில்லை. நான் எனது பிராதிலும் வடக்கு ஓடைபுறம்போக்கு மாடக்கண் நாடாரின் அனுபவ சொத்து என்று காண்பித்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். எனது கிரைய பத்திரத்தில் உள்ள எல்கை விவரங்களுக்கு மாறாக பிராதில் எல்கை விவரங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் ஓடை புறம்போக்கு என்று சொல்லும் இடம் 2 அடியா அல்லது 3 அடி இருக்குமா என்றால், அதிகமாக இருக்கும் அதன் அகலம் என்ன இருக்கும் என்று சொன்னால் 10, 15 அடி இருக்கும். மேற்படி 15 அடி புறம்போக்கிற்கு மேற்கு என்ன இருக்கிறது என்றால் ரோடு இருக்கிறது. ரோட்டிற்கும் எனது இடத்திற்கும் இடையில் புறம்போக்கு இடம் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ரோடு தற்போதுதான் போடப்பட்டுள்ளது. ரோடு எத்தனை அடியில˙ போட்டிருப்பார்கள் என்றால், 15 அடியில் போட்டிருப்பார்கள். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் முன் ஆவணம் எதுவும் நான் தாக்கல செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். செல்லத்தாய் அம்மாளுக்கு பட்டா மூலம் பாத்தியம் செல்லத்தாய் அம்மாளின் கணவா˙ பெயா˙ கோபால் நாடாா் என்றால் சரிதான். நான் தாக்கல˙ செய்துள்ள பட்டா தாவா சொத்திற்கானது என்று சொன்னால் சரிதான். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடாகியுள்ளது. வா.சா.ஆ.2 ஆன பட்டா 322ல் முதல் பட்டாதாரா் பெயராக மாடக்கண் நாடாரின் மகன் ராஜன்துரை பெயர் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2ல் உள்ள 1 முதல் 3 வரை உள்ள பட்டாதாரரின் தகப்பனாா் மாடக்கண் நாடாா் என்று சொன்னால் சரிதான். இராஜன்துரை என்பவா் இவ்வழக்கு 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது கட்சி 92 சென்டில் மாடக்கண் நாடாருக்கு உரிமை இல்லை என்று சொல்லுகிறேனா என்றால, உரிமை இல்லை என்று சொல்லவில்லை. 92 சென்ட்டில் தெற்கு பக்கமாக இருக்கிறது ஆனால் அவா்கள் சொத்தை மாற்றிக்கொடுத்துவிட்டாா்கள் தற்போது அவா்களுக்கு இடம் கிடையாது., மாடக்கண் நாடாா் அந்த சொத்தை யாருக்கு கிரையம் கொடுத்தாா்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் கிரையமாக கொடுக்கவில்லை நிலத்திற்கு நிலம் மாற்றிக்கொண்டாா்கள். யாரிடம் மாற்றிக்கொண்டாா்கள் என்றால் நல்லக்கண் நாடாரிடம் மாடக்கன் நாடாா் சொத்தை மாற்றிக்கொண்டாா். நான் சாட்சியம் சொல்லியுள்ள விவரத்தின் படி மாடக்கன் நாடாருக்கும் தாவா 92 சென்டில் உரிமை உள்ளது என்று சொன்னால் உரிமை கிடையாது. பட்டா மாற்றம் ஆகாமல் இருப்பதால் அவா்கள் இடையூறு செய்கிறாா்கள்.